தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
Peer-Reviewed Open Access Crossref Google Scholar
SJIF Impact Factor3.5 (2024-) Multidisciplinary
UGC Approved by Transparent Peer Review

# இராவணகாவியத்தில் தமிழ்மொழியின் சிறப்புகள்

## Greatness of the Tamil Language in *Ravana Kaviyam*

**ஆ.ஹரிதாபேபி[1*],முனைவர் ச.தனலெட்சுமி[2],**

*[1]முனைவர் பட்ட ஆய்வாளர்(முழுநேரம்),தமிழாய்வுத்துறை,, தி ஸ்டாண்டர்டு ஃபயர்ஒர்க்ஸ் இராஜரத்தினம் மகளிர் கல்லூரி, சிவகாசி., IN*

*[2]நெறியாளர், தமிழ்த்துறை உதவிப்பேராசிரியர், தமிழாய்வுத்துறை,, தி ஸ்டாண்டர்டு ஃபயர்ஒர்க்ஸ் இராஜரத்தினம் மகளிர் கல்லூரி, சிவகாசி., IN*

*தொடர்புக்கு: ஆ.ஹரிதாபேபி — harithababy-phdtam@sfrcollege.edu.in

**ORCID:** ஆ.ஹரிதாபேபி https://orcid.org/0009-0003-6247-8069



| பெறப்பட்டது | திருத்தப்பட்டது | ஏற்கப்பட்டது | வெளியிடப்பட்டது |
|---|---|---|---|
| 25 Sep 2026 | 1 Oct 2026 | 2 Oct 2026 | 2 Oct 2026 |
| கட்டுரை எண் MS26-MMGCTZ | DOI https://doi.org/10.63300/tm12052026.04 | தொகுதி / இதழ் தொகுதி 12, இதழ் 05 (October 2026) | P58-72 |



**சுருக்கம்**

புலவர் குழந்தையின் இராவணகாவியம் பழந்தமிழ் மரபைப் பின்பற்றிய காப்பியம் ஆகும். இராமாயண கதையை அடிப்படையாய் இராவணனைக் காவியத்தலைவனாகக் கொண்டு தமிழர்கள் தம் பண்பாட்டுச் சிறப்பையும் இராவணன் பெருமையும் இக்காப்பியத்தில் இடம்பெற்றுள்ளன. மனதில் தோன்றும் எண்ணங்களை மற்றவர்களுக்குத் தெரிவிக்கும் கருவியே மொழியாகும். மொழி சமூகத்தின் அடையாளம், பண்பாடு மற்றும் அறிவின் வெளிப்பாடு ஆகும். தமிழ் என்ற சொல்லுக்கு இனிமை என்று பொருள். இராவணகாவியத்தில் அனைத்து மொழிகளுக்கும் தமிழ் தாய்மொழி, தலைமைமொழி என்றும், தனக்குத் தானே நிகரான ஒப்பற்றது தமிழ்மொழி என்றும், மூவேந்தர் வளர்த்த தமிழ்மொழி என்றும், இராவணின் நாட்டின் அனைத்து இடங்களிலும் தமிழ் பாடல்கள், விழாக்கள் அனைத்தும் தமிழின் பெருமையைச் சொல்லும் கொண்டாட்டங்கள், வீதிகளில் எல்லாம் தமிழ்மொழியின் நறுமணம் என்றும், தமிழ்புலவர்களுக்கு பரிசுகளை அளித்து தமிழை வளர்த்தனர் என்றும், இராவணன் தமிழ்க்கொடி பயன்படுத்தினான் என்றும், ஆட்சிமொழியாக தமிழ்மொழி இருந்தது என்றும், தமிழ்ச் சொற்களைக் கேட்டால் காதுக்கு இன்பம், சொன்னால் நாவினுக்கு இன்பம், உள்ளே சுவைத்து உண்டால் மனத்திற்கு இன்பம், உணர்ந்து பார்த்தால் உணர்வுக்கு இன்பம், பாட்டிலும் உரைநடையிலும் அமைந்து இயங்கிச் செல்லும் தன்மையது. தமிழ் நீக்க முடியாத இன்பம், தமிழ் முச்சங்கம் என்று இராவணகாவியத்தில் தமிழின் சிறப்புகள் சார்ந்த செய்திகள் இக்கட்டுரை இடம்பெற்றுள்ளது.

**திறவுச்சொற்கள்:** இராவணகாவியம்; தமிழ்; ஆதிமொழி; மூவேந்தர் மொழி; தமிழ்கொடி; ஆட்சிமொழி; தமிழின் இனிமை; தமிழ்ச் சங்கம் .

**முன்னுரை**

இராவணகாவியம் இராமாயண கதையை அடிப்படையாய், இராவணனைக் காவியத்தலைவனாகக் கொண்டு அமைக்கப்பட்ட நூல் ஆகும். இராவணகாவியத்தின் ஆசிரியர் புலவர் குழந்தை. மனிதன் தன் கருத்துகளைப் பிறருடன் பகிர்ந்து கொள்ளப் பயன்படும் ஒலி மற்றும் குறியீட்டு அமைப்பே மொழி எனப்படும். உலகில் பல மொழிகள் தோன்றி வழங்கி மறைந்தொழிந்தன. ஒரு சில மொழிகள் மட்டும் இன்னும் அழியாமல் நிலைபெற்றுள்ளன. அவ்வாறு நிலைத்துள்ள மொழிகளிலும் சில பேச்சு வழக்கு இழந்து இலக்கிய மொழியாக மட்டும் தோன்றி வாழ்ந்து வருகின்றன. மிகப் பழங்காலத்திலேயே தோன்றி, செல்வாக்குடன் வளர்ந்து இன்றளவும் வாழ்ந்து விளங்குவன தமிழ், சீனம் முதலிய சில மொழிகளே. இவற்றுள் பழைமைக்கும் பழைமையான இலக்கியவளம் உடையதாய் நிற்பதோடு, புதுமைக்கும் புதுமையாய்க் கருத்துச் செல்வம் நிறைந்ததாய் என்றும் இளமைப் பொலிவுடன் விளங்குவது தமிழ்மொழியாகும். தமிழ்மொழி வெறும் தகவல் தொடர்பு கருவி மட்டுமல்ல, பண்பாடு, கலை, அறம் மற்றும் அறிவியல் என வாழ்வின் அனைத்துக் கூறுகளையும் கொண்டுள்ளது. அவ்வகையிலேயே இராவணகாவியத்தில் தமிழின் சிறப்புகளை ஆராய்வதாக இக்கட்டுரை அமைகின்றது.

**மொழி**

மனதில் தோன்றும் எண்ணங்களை மற்றவர்களுக்குத் தெரிவிக்கும் கருவியே மொழியாகும். மொழி சமூகத்தின் அடையாளம், பண்பாடு மற்றும் அறிவின் வெளிப்பாடு ஆகும். மொழி குறித்து பல்வேறு அறிஞர்கள் விளக்கம் தருகின்றனர். மொழி அறிஞர் மு.வ. அவர்கள் “மொழி என்பது மக்கள் படைத்துக் காக்கும் அரியதொரு கலை. மொழியே மக்களின் அறிவை வளர்த்து உயர்த்தும் அரிய கருவியாகவும் உள்ளது. பலர் சேர்ந்து ஒரு சமுதாயமாய், ஓர் இனமாய்ப் பழகி வாழ்வதற்குத் துணையாக உள்ள சிறந்த கருவி மொழியே. சமுதாய வாழ்வுக்கு அறிகுறியாக உள்ள மொழியே, அந்தச் சமுதாய வளர்ச்சிக்கும் காரணமாக உள்ளது. சமுதாயத்தால் வளர்ந்து வருவது மொழி ”[1] என்கின்றார்.

**தமிழ்மொழி**

தமிழ் என்ற சொல்லுக்கு இனிமை என்று பொருள்.

“இனிமையும் நீர்மையும் தமிழ் எனலாகும்” [2] (பிங்கல நிகண்டு, 580)

என்று பிங்கலந்தை நிகண்டு, தமிழ் என்பதற்கு இனிமை, நீர்மை என்று பொருள் தருகிறது.

தமிழ் என்பதற்கு தமிழ்மொழி அகராதி “குணக்கடல், குமரி,குடகம், வேங்கடம் என்னும் நான்கெல்லைக்குட்பட்ட நாட்டிலே வழங்கி வருவதோர் பாஷை. இது திரமிளம் என்னும் வடச்சொற் சிதைவென்றாற் சில ஆசிரியர்.தமிழ் என்னுஞ் சொல்லுக்குப் பொருள் இனிமை”[3] என்ற பொருள் தருகிறது.

Tamilmanam International Research Journal of Tamil Studies
தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
Vol. 12, No. 05 (October 2026), pp. 1–10
ISSN 3049-0723 (Online) · ISSN 3107-7781 (Print)

தமிழ் என்பதற்கு செந்தமிழ் அகராதி ,"இனிமை, நீர்மை, தமிழர், தமிழ்நாடு"[4] என்று விளக்கம் தருகிறது.

தமிழ் என்பதற்கு க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி "தமிழ்நாட்டில் பெரும்பான்மையினராலும் இலங்கை, மலேசியா முதலிய நாடுகளில் பேசப்படுகிற, திராவிட மொழிக் குடும்பத்தைச் சேர்ந்த தொன்மையான மொழி"[5] எனப் பொருள் தருகிறது.

கவிக்குயில் பாரதி ,

'யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழி போல்
இனிதாவ தெங்கும் காணோம்' [6] (பாரதியார் கவிதைகள்,பக், 47)

என்று தமிழினுடைய இனிமையை உணர்த்தியுள்ளார்.

**உலகின் ஆதி மொழி**

காலம் பல மாறினாலும் கண்டம் பல அழிந்தாலும் அழியாத சிறப்புடைய மொழியாக தமிழ் மொழி திகழ்கிறது. தமிழ் உலகின் முதன்மொழி என்று மொழி நூல் அறிஞர் பலர் போற்றுகின்றனர்."தமிழ்மொழி பெருமைமிக்க பழைய வரலாறு உடையதாகும்"[7]. முதல் முதலில் இந்தப் பரந்த நிலவுலகில் ஒரு பகுதியில் மக்கள் தோன்றி வளர்ந்தனர். அவர்கள் பேசிய மொழியே முதல்மொழி. அந்த மக்கள் அவ்வவ்விடங்களில் அந்த மொழியைப் பல்வேறு வகையாகத் திரித்துப் பேசினர். நாளடைவில் அந்த மொழிகளில் ஒவ்வொன்றும் பல்வேறு கிளைமொழிகளாக பிரிந்து வளர்ந்தன. அவ்வாறு மக்கள் முதல்முதலில் தோன்றிய நிலப்பகுதியை லெமூரியா என்பர். லெமூரியா நிலப்பரப்பை குமரிக்கண்டம் என்று தமிழிலக்கியத்தால் வழி அறிகின்றோம். அத்தகைய குமரிக்கண்டத்தில் முதல்முதலில் மக்கள் இருந்தனர் என்றும், அவர்கள் பேசிய மொழியே உலக முதல்மொழி என்றும், கொண்டால், பழந்தமிழரே முதலில் தோன்றிய மக்கள் என்றும் பழந்தமிழே முதலில் பேசப்பட்ட மொழி என்றும், உலகில் ஆங்கிலேயர் முதலான ஐரோப்பியரும் மற்ற இனத்தவர்களும் பழந்தமிழரின் வழித்தோன்றியவர்களே என்றும், மொகஞ்சதரோவில் வளர்ந்த பழந்தமிழ் நாகரிகமே மத்திய தரைக்கடலை அடுத்த பகுதிகளில் எகிப்து நாகரிகம், கிரேக்க நாகரிகம் முதலியன நாகரிகம் வளரக் காரணமாக இருந்தது என்றும் கருத இடம் உள்ளது.

தமிழ்மொழி உலகம் உருவான காலத்திலேயே தோன்றி, பல்வேறு கலை அறிவைத் தன்னுள் கொண்டு, இன்று உலகில் உள்ள அனைத்து மொழிகளுக்கும் தலைமையாய் விளங்குகிறது என்று பின்வரும் பாடலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**"உலக மூமையா வுள்ளவக் காலையே**
**பலக லைப்பயன் பாங்குறத் தாங்கியே**
**இலகி யின்றுநா னென்னு மொழிக்கெலாம்**
**தலைமை யாந்தமிழ்த் தாய்..."** [8]

**(இராவணகாவியம்., பாயிரம்.,பா.,1)**

என்ற பாடலில் உலகில் உள்ள அத்தனை மொழிகளுக்கும் தமிழ் தலைமை மொழி என்று புலவர் குழந்தை குறிப்பிடுகின்றனர்.

ஒரு இனத்தின் கலாச்சாரம், பழக்கவழக்கங்கள் மற்றும் வாழ்வியல் விழுமியங்கள் அனைத்தும் அந்த இனத்தின் மொழியில் தான் பொதிந்துள்ளன. தாய்மொழியைப் பாதுகாப்பது

Vol. 12, No. 05 (October 2026), pp. 1–10
ISSN 3049-0723 (Online) · ISSN 3107-7781 (Print)

என்பது நம்முடைய முன்னோர்களின் வரலாற்றையும், வாழ்வியலையும் பாதுகாப்பதாகும். மனோன்மணியம் சுந்தரனாரும்,

**‘கன்னடமும் களிதெலுங்கும் கவின் மலையாளமும் துளுவும்**
**உன் உதிரத்து உதித்தெழுந்தே ஒன்று பல அயிடினும்**
**ஆரியம்போல் உலகவழக் கழிந்தொழிந்து சிதையாஉன்**
**சீரிளமைத் திறம்வியந்து செயல்மறந்து வாழ்த்துதுமே!”[9]**

**(மனோன்மணீயம்: பாயிரம்: தமிழ்த்தெய்வ வணக்கம்: பா., 2 )**

என்றும் புகழ்ந்து பாடியிருப்பதன் மூலம் நம் மொழியின் ஆழத்தை உணர்கிறோம்.

கன்னடம், தெலுங்கு, மலையாளம் போன்ற மொழிகள் தமிழிலிருந்தே பிறந்தன. தாயிடமிருந்து பிள்ளைகள் பிரிந்து சென்றாலும், தாய் தமிழ் இன்றும் சிதையாமல், தன் தனித்தன்மையுடன் பொலிவுடன் விளங்குகின்றது என்று பின்வரும் பாடல் எடுத்துகாட்டுகிறது.

**“கன்ன டந்தெலுங் கந்துளு வம்புயல்**
**மன்னி மேவு மணிமலை யாளமாம்**
**பொன்னின் மேனி திரிந்து பொலிவறு**
**தன்னை நேர்தமிழ்த் தாய்...” [10] (இராவணகாவியம்., பாயிரம்.,பா.,3)**

என்ற பாடலடிகள் கன்னடம், தெலுங்கு, மலையாளம் அனைத்து மொழிகளின் தாய் தமிழ் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

**தன்னிகர் இல்லாத மொழி**

உலகில் எத்தனையோ மொழிகள் தோன்றின, மறைந்தன. ஆனால், காலத்தின் சுழற்சியில் வீழாமல், இன்றும் இளமையோடு திகழும் ஒரே மொழி நம் தமிழ்மொழி தான். தமிழைப் போலும் அதிகமான சொற்பரப்பைக் கொண்ட ஒரு மொழி நாம் அறிந்தவற்றுள் வேறு எதுவுமில்லை. பிற மொழிகளின் துணை இன்றித் தனித்து இயங்கும் வல்லமை கொண்டதால் உயர்தனிச் செம்மொழி எனப்படுகிறது. இதனை,

**“பின்னர் வந்து பிறந்து செருக்கொடு**
**முன்னர் வந்த மொழிபல வீயவும்**
**இன்னு மன்ன விளமைய ளாயுள**
**தன்னி கர்தமிழ்த் தாய்…” [11] (இராவணகாவியம்., பாயிரம்.,பா.,2)**

என்ற பாடலடியில், தமிழுக்குப் பிறகு தோன்றிய சில மொழிகள் மிகுந்த செருக்கோடு வளர்ந்தன. ஆனால், தமிழுக்கு முன்பே தோன்றியதாகச் சொல்லப்பட்ட எத்தனையோ மொழிகள் கால ஓட்டத்தில் அழிந்து மறைந்து போயின. தனக்குப் பின் வந்த மொழிகள் ஆரவாரம் செய்யும் போதும், எதற்கும் கலங்காமல் இன்றும் சிதையாத இளமையோடு திகழ்கின்ற, தனக்குத் தானே நிகரான ஒப்பற்றது தமிழ்மொழி என்று விளக்கப்பட்டுள்ளது.

**மூவேந்தர் வளர்த்த மொழி**

தமிழ்மொழியின் வரலாறு மூவேந்தர்களான **சேர, சோழ, பாண்டியர்** ஆட்சியோடு ஆழமாக பிணைந்துள்ளது.

**“தமிழ் கெழு மூவர்” [12] (அகம் 31 : 14)**

Vol. 12, No. 05 (October 2026), pp. 1–10
ISSN 3049-0723 (Online) · ISSN 3107-7781 (Print)

என்ற அடிகள் " தமிழோடு பொருந்திய மூவேந்தர்" என்று பொருளைத் தருகிறது. மூவேந்தர்களும், வறுமையில் இருந்த புலவர்களுக்குப் பொன்னும் பொருளும் கொடுத்துத் தமிழை வளர்த்தனர். தமிழை ஆட்சி மொழியாகவும், அரியணை மொழியாகவும் வைத்திருந்தனர். ஊர்த்தோறும் பள்ளிகளையும், மடங்களையும் அமைத்துத் தமிழ் வளர்க்க உதவினர். எனவே மூவேந்தர்கள் வெறும் அரசர்களாக மட்டும் இல்லை , அவர்கள் தமிழின் தூண்களாக இருந்தனர் என்பதை அறியமுடிகிறது.

தமிழகத்தின் மூவேந்தர்களும், தங்களின் உயிர் எனக் கருதிப் போற்றித் தமிழை வளர்த்தனர்.இதனை,

**"மூவர் மன்னர் முறையொடு முன்புதம்**
**ஆவி யென்ன அருமையிற் போற்றி..."** [13]
**(இராவணகாவியம்., பாயிரம்.,பா.,4)**

என்ற பாடலடிகள் சுட்டுகிறது. மேலும், இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழை வளர்க்கும் புலவர்களாகவும் , பகைவர்கள் அஞ்சத்தக்க வலிமையான பாதுகாப்பைக் கொண்ட தமிழகத்தைக் காக்கும் காவலர்களாகவும் தமிழ் மரபினைச் சார்ந்து நின்று, முறையோடு ஆட்சி செய்த மூவேந்தர்கள் சேர, சோழ, பாண்டியர் என்று விளக்கப்பட்டுள்ளது. இதனை,

**"படியிடை முத்தமிழ்ப் பாவல ராகவும்**
**கடியுடைத் தமிழகக் காவல ராகவும்**
**வடிவுடை முதுதமிழ் மரபினின் மேவிய**
**முடியுடை மூவர்தம் மொய்கழல் போற்றுவாம்."** [14]
**(இராவணகாவியம்., பாயிரம்., பா.,22)**

என்ற பாடலடிகளில் மூவேந்தர்கள் தமிழ்ப்புலவர்களாகவும், தமிழகத்தின் காவலர்களாகவும் இருந்தனர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

**நாடெங்கும் தமிழ்**

உலகில் பல மொழிகளில் தமிழ்ச்சொற்கள் காணப்படுகிறது."மிகப்பழைமையான நாகரிகமாக கண்டறியப்பட்ட மொகஞ்கதாரோ என்னும் இடத்தில் சுமார் 6000 ஆண்டுகளுக்கு முன் வழங்கிய மொழி, தமிழ்ச்சொற்கள் நிறைந்துள்ளது" [15] எனப் பாதிரியார் ஹீராஸ் கூறுகின்றார்.

இராவணகாவியம் நூலில், அனைத்து விழாக்களும் தமிழை முதன்மைப்படுத்தியே நடைபெற்றதாக ஆசிரியர் கூறுகிறார். நாடெங்கும் அறிவுமிக்க புலவர்களின் கூட்டம் பெருகியுள்ளது. நகரங்கள் தோறும் கல்வி புகட்டும் பள்ளிக்கூடங்கள் நிறைந்துள்ளன. ஒவ்வொரு வீடும் தமிழ்த்தாய்க்குரிய கோவிலாக மாறியுள்ளது. எங்குத் திரும்பினாலும் நடைபெறும் விழாக்கள் அனைத்தும் தமிழின் பெருமையைச் சொல்லும் கொண்டாட்டங்களாகவே விளங்குகின்றன. பாடல்கள் அனைத்தும் தமிழில் அமைகின்றன. வயல்வெளிகளிலும் ஏனைய இடங்களிலும் தமிழின் கலைகளும் கூத்தாட்டங்களும் முழங்குகின்றன. திரும்பிய பக்கம் எல்லாம், தமிழிலே மக்கள் உரையாடித் திளைத்தனர் என்பதை,

**"நாடெலாம் புலவர் கூட்டம் நகரெலாம் பள்ளி யீட்டம்**
**வீடெலாந் தமிழ்த்தாய்க் கோட்டம் விழவெலாந் தமிழ்க்கொண்டாட்டம்**

Vol. 12, No. 05 (October 2026), pp. 1–10
ISSN 3049-0723 (Online) · ISSN 3107-7781 (Print)

**பாடெலாந் தமிழின் றேட்டம் பணையெலாந் தமிழ்க்கூத்தாட்டம்**
**மாடெலாந் தமிழ்ச்சொல் லாட்டம் வண்டமி ழுகத்து மாதோ."[16]**

**(இராவணகாவியம்., தாய்மொழிப் படலம்.,பா.,20)**

என்ற அடிகள் குறிப்பிடப்பட்டுள்ளன. மேலும்,

**"காரெலா மகிலி னாற்றங் காவெலாம் பூவி னாற்றம்**
**நீரெலாங் கலவை நாற்றம் நிலமெலாஞ் சேற்றி னாற்றம்ங்க**
**ஊரெலாந் தமிழி னாற்றம் உள்ளெலா முணவி னாற்றம்**
**யாரெலா வளமு மாற்ற வறையுதற் குரிய ரம்மா."[17]**

**(இராவணகாவியம்., இலங்கைப் படலம்.,பா.,18)**

என்ற பாடலடியில், மேகங்கள் நிறைந்த கார்காலமெல்லாம் அகிலின் நறுமணம், சோலைகளில் எல்லாம் மலர்களின் நறுமணம், நீர் நிலைகளில் எல்லாம் சந்தனக் குழம்பின் நறுமணம், ஊர்களில் உள்ள வீதிகளில் எல்லாம் தமிழ்மொழியின் நறுமணம், வீடுகளில் எல்லாம், அறுசுவையுடைய உணவின் நறுமணம் என்று விளக்கப்பட்டுள்ளது. மேலும்,

**தண்ணுமை தாளத் தோடுந் தழங்கியாழ்த் திறத்தி னோடும்**
**நண்ணிய வராகத் தோடும் நல்லிசைத் தமிழர் பாடும்**
**பண்ணமை தமிழின் றூய பாட்டினைக் கேட்டுக் கேட்டுக்**
**கண்ணிய கடலு முள்ளக் களிப்பினாற் பொங்கிற் றம்மா." [18]**

**(இராவணகாவியம்., பாயிரம்.,பா.,18)**

என்ற பாடலடியில், மத்தளம், தாளம், இனிமையாக முழங்கும் யாழ் மற்றும் புல்லாங்குழல் ஆகிய இசைக்கருவிகள் அனைத்தும் ஒன்று சேர்ந்து ஒலிக்கின்றன. அந்த இசையோடு இணைந்து, இசையில் வல்லுநர்களான தமிழர்கள் பண்ணோடு கூடிய தூய தமிழ்ப் பாடல்களைப் பாடுகிறார்கள். அந்தத் தமிழ்ப் பாடல்களின் இனிமையை மீண்டும் மீண்டும் கேட்டு ரசித்த பெரிய கடலானது, மனமகிழ்ச்சி தாங்காமல் ஆர்ப்பரித்துப் பொங்கியது என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

**தமிழ்ப்புலவர்களுக்கு பரிசு**

பண்டைய தமிழகத்தில் தமிழ்ப் புலவர்களுக்கும், அவர்களை ஆதரித்த மன்னர்களுக்கும் இடையிலான உறவு மிகவும் போற்றத்தக்கதாக இருந்தது. பண்டைய தமிழ் மன்னர்கள் புலவர்களைப் போற்றுவதிலும், அவர்களுக்குத் தகுந்த பரிசுகளை வழங்குவதிலும் மிகுந்த ஆர்வம் கொண்டிருந்தனர். புலவர்களின் அறிவுத்திறனை மதித்து, அவர்களுக்குப் பொன்னும் பொருளும் மட்டுமல்லாது, நிலங்களையும் பரிசாக வழங்கிய பெருமை தமிழ் மன்னர்களுக்கு உண்டு.

மதுரைக்காஞ்சியில் பாண்டியன் நெடுஞ்செழியன்,புலவர்க்கு வழங்கிய கொடைத்திறனைக் மாங்குடி மருதனார் கூறுகிறார்.

**"பாணர் வருக பாட்டியர் வருக**
**யாணர்ப் புலவரொடு வயிரியர் வருகென**
**இருங்கிளை புரக்கும் இரவலர்க் கெல்லாம்**
**கொடுஞ்சி நெடுந்தேர் களிற்றொடும் வீசிக்.." [19] (மதுரைக்காஞ்சி 750)**

என்ற பாடலடியில், பாண்டிய மன்னன் புலவர்க்கு அளித்த கொடைத்திறனைப் பற்றி கூறுகிறது.

Vol. 12, No. 05 (October 2026), pp. 1–10
ISSN 3049-0723 (Online) · ISSN 3107-7781 (Print)

பட்டினப்பாலை பாடியதற்காக புலவர் கடியலூர் உருத்திரங்கண்ணனாருக்கு, சோழ மன்னன் கரிகால் பெருவளத்தான் 16 நூறாயிரம் (16,00,000) பொன் பரிசாக வழங்கினான். பரிசாக அளித்த அந்தப் பொன்னோடு சேர்த்து, பட்டினப்பாலையை அரங்கேற்றுவதற்காக அமைக்கப்பட்ட 16 தூண்கள் கொண்ட மண்டபத்தையும் புலவருக்கே பரிசாகக் கரிகாலன் வழங்கினான். இதனை கலிங்கத்துப்பரணி, ராசேந்திர சோழன் உலா மற்றும் தமிழ்விடுதூது போன்ற தமிழ் இலக்கிய நூல்கள் உறுதிப்படுத்துகின்றன.

**“பாடியதோர் வஞ்சிநெடும் பாட்டால் பதினாறு**
**கோடிபொன் கொண்டதுநின் கொற்றமே..” [20] (தமிழ்விடுதூது,பா, 193)**

என்று கூறுகிறது.

**“தேங்குபுகழ் தாங்கிய செழும்புலவர் கொள்ள**
**ஓங்குமுகில் தோய்முக டுயர்ந்தமலை யேறி**
**ஆங்கவர்கள் கண்டநில மானவை யனைத்தும்**
**பாங்கொடு கொடுத்துயர் பசுந்தமிழ் வளர்த்தார்.” [21]**
**(இராவணகாவியம்., தாய்மொழிப் படலம்.,பா.,28)**

என்ற பாடலடியில், நிறைவான புகழ் பொருந்திய செழுந்தமிழ்ப் புலவர்கள் ஏற்றுக் கொள்ளும் வண்ணம், ஓங்கி உயர்ந்த மேகம் தவழும் உயர்ந்த மலையிலே ஏறி, அங்கிருந்து அவர்களின் கண்ணுக்கு எட்டிய தொலைவுப் பரப்புள்ள நிலங்கள் அனைத்தையும் பாங்கொடு பரிசாகக் கொடுத்துப் பைந்தமிழ் வளர்த்தனர் அரசர்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும்,

**“பாடுபவ ருக்குமுரை பண்ணுபவ ருக்கும்**
**ஏடதுவி ரித்துரை யிசைப்பவர் தமக்கும்**
**நாடுநக ரோடவர் நயப்பவை கொடுத்தும்**
**தேடிவரு வித்துமுயர் செந்தமிழ் வளர்த்தார்.” [22]**
**(இராவணகாவியம்., தாய்மொழிப் படலம்.,பா.,22)**

என்ற பாடலடியில், மன்னர்கள் பாடல்களைப் பாடும் புலவர்களுக்கும், அந்தப் பாடல்களுக்குத் தெளிவான விளக்கவுரை அளிக்கும் அறிஞர்களுக்கும், பழங்காலச் சுவடிகளையும் நூல்களையும் விரித்துப் படித்து, மக்களுக்கு அதன் பொருளை எடுத்துரைப்பவர்களுக்கும், அவர்கள் விரும்பும் நாடு, நகரங்கள் மற்றும் செல்வம் என அவர்கள் மனம் மகிழக்கூடிய அனைத்தையும் பரிசாக வழங்கியும், புலவர்களைத் தேடிச் சென்று, அவர்களைத் தன் அவைக்களத்திற்கு வரவழைத்து, அவர்கள் மூலமாக நம்முடைய உயர்ந்த செந்தமிழை வளர்த்தார் என்று விளக்கப்பட்டுள்ளது.

இவ்வாறாக மன்னர்கள் தமிழ்புலவர்களுக்கு பரிசுகளை அளித்து தமிழை வளர்த்தனர்.

**தமிழ்க்கொடி**

பண்டைய மன்னர்கள் தங்களுக்கு என்று தனித்துவமான கொடிகளையும், சின்னங்களையும் அடையாளமாகக் கொண்டிருந்தனர். இம்மன்னர்கள் போர்க்களங்களிலும், கோட்டை மதில்களிலும் இந்தக் கொடிகளை ஏற்றித் தங்கள் நாட்டின் பெருமையை நிலைநாட்டினர். மன்னர்கன் கொடிகளைப் பெருமையாகவும், அடையாளமாகவும் கருதுவர்.

Vol. 12, No. 05 (October 2026), pp. 1–10
ISSN 3049-0723 (Online) · ISSN 3107-7781 (Print)

ஒரு நாட்டின் குறிக்கோள், பண்பாட்டின் எடுத்துக்காட்டும் அடையாளச்சின்னம் கொடி. ஒரு தலைவனின் உறவினர், குடி, படை அனைவரையும் ஒன்று திரட்டும் சின்னமாகக் கொடி தொடக்கத்தில் பயன்படுத்தப்பட்டது.

எட்டுத்தொகையும் பத்துப்பாட்டுமாகிய சங்கஇலக்கியங்களுக்கு முன்பும் கொடி பற்றி அறிய இயல்கின்றது. தொல்காப்பியம், கொடி எனும் சொல்லைத் தருவதுடன் கடவுட் கொடி, அரசர் கொடி ஆகிய செய்திகளையும் சுட்டுகிறது.

**“கொடி முன் வரினே ஐ அவண் நிற்ப**

**கடிநிலை இன்றே வல்லெழுத்து மிகுதி” [23] ( தொல்.எழு.உயிர்மயங்.82)**

என்றும்,

**“படையும் கொடியும் குடையும் முரசும்…” [24] (தொல்.பொருள்.மரபு.73)**

ஆகிய இடங்களில் கொடி பற்றி தொல்காப்பியர் குறிப்பிட்டுள்ளார். சங்க இலக்கியத்தில்,

**“கொடி நுடங்கு யானை நெடுமா வளவன்…” [25] (புறம்.228.10)**

**“கொற்ற நீள்குடைக் கொடித் தேர்ச் செழியன்…” [26] (புறம். 24.23)**

என்ற புறநானூறு பாடல்களில் கொடி பற்றியக் குறிப்புகள் உள்ளன.

இராவணகாவியத்தில் இராவணன் தமிழ்க்கொடி பயன்படுத்தினான். தமிழ்க்கொடியில் அழகிய ஏடும் எழுத்தாணியும் பொறிக்கப்பட்டுள்ளது என்பதை,

**“முருகியலே டெழுத்தாணி மருவுதமிழ்க் கொடி….” [27]**

**(இராவணகாவியம்., காட்சிப் படலம்.,பா.,38)**

எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.மேலும்,

**“கண்டன னிறைவனுங் கண்க ளிக்கவே தண்டமிழ்க்**

**கொடிக்குமுன் றலைவ ணங்கினன்…” [28]**

**(இராவணகாவியம்., பாயிரம்.,பா.,18)**

என்ற பாடலடியில், அரசன் இராவணன் தமிழ்க்கொடியின் முன் தலைக்கவிந்து வணக்கம் செய்தான் என்று விளக்கப்பட்டுள்ளது.

**ஆட்சிமொழி தமிழ்**

தமிழ் அரியணையில் அமர்ந்து அறம் காக்கும் மொழியாகத் திகழ்கிறது. இயற்கை வளம், கலை வளம் மற்றும் செல்வ வளம் நிறைந்த தமிழகம் முழுவதையும் தமிழை மட்டுமே ஆட்சி மொழியாகக் கொண்டு திறம்பட ஆட்சி செய்த ஒரு மன்னனாகவும், வேற்று மொழி ஆதிக்கமின்றி, ஒரு குடையின் கீழ் தமிழை அரியணையில் ஏற்றி அழகு பார்த்தவன் இராவணன் என்பதை,

**“…..வளமலி தமிழக முழுதும் ஒருமொழி**

**வைத்தாண் டிடுமிரா வணனும் ..” [29]**

**(இராவணகாவியம்., தமிழகம் புகு படலம்.,பா.,48)**

என்னும் பாடலடி எடுத்துக்காட்டுகிறது. இராவணனை ஒரு சிறந்த தமிழ்மொழிப் பற்றாளராகவும், ஒரு மொழியான தமிழை ஆட்சிமொழியாக வைத்து அரசாளும் மன்னன் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

**அமிழ்தினும் இனிய தமிழ்**

Vol. 12, No. 05 (October 2026), pp. 1–10
ISSN 3049-0723 (Online) · ISSN 3107-7781 (Print)

உலகின் மூத்த மொழிகளில் ஒன்றான தமிழ், வெறும் பேச்சு மொழியாக மட்டும் இல்லாமல், உணர்வோடு கலந்த உயிராகத் திகழ்கிறது. தமிழனின் இனிமையை,

**“தமிழுக்கும் அமுதென்று பேர்” [30]**

**(பாரதிதாசன் கவிதைகள், தொகுதி 1, ப. 89.)**

என்றும் பாரதிதாசன் பைந்தமிழ் இனிமையைப் பறைசாற்றுகிறார். மேலும்,

**“யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல்**
**இனிதாவது எங்கும் காணோம்” [31]**

**(பாரதியார் கவிதைகள்,பக், 47)**

என்று பாரதியார் அனைத்து மொழிகளையும் விட தமிழ்மொழி இனிமையானது என்று எடுத்தியம்புவதையும் காணலாம்.

அமிழ்தம் வாய்க்கு மட்டுமே இன்பம்; செவிக்கு இல்லை! ஆதலால், அந்த அமிழ்தினும் இனிமையான தமிழ்மொழியை முற்ற உணர்ந்தறிந்தவன் இராவணன். தாய்நாடு, தம் இனம், தாய்மொழிப் பற்று இவற்றில் மிக்க பற்றுள்ளவன் அவன். தமிழறிந்தவர்களைத் தன் உயிரினும் மேலாக மதிக்கும் தகுதி பெற்றவன் என்பதை,

**“அமிழ்துவாய்க் கொன்றே செவிக்கிலை யின்பம்**
**ஆதலால் அமிழ்தினு மினிய**
**தமிழ்முழு துணர்ந்தோன் தாயகம் தமினம் இரா!**

**தாய்மொழிப் பற்றினில் மிக்கோன் ...” [32]**

**(இராவணகாவியம்., தமிழகம் புகு படலம்.,பா.,49)**

என்ற பாடலடியில் விளக்கப்பட்டுள்ளது. தமிழ்ச் சொற்களைக் கேட்டால் காதுக்கு இன்பம், சொன்னால் நாவினுக்கு இன்பம், உள்ளே சுவைத்து உண்டால் மனத்திற்கு இன்பம், உணர்ந்து பார்த்தால் உணர்வுக்கு இன்பம், பாட்டிலும் உரைநடையிலும் அமைந்து இயங்கிச் செல்லும் தன்மையது. தமிழ் நீக்க முடியாத இன்பம் தருவதாக இருப்பதனால் தமிழை யார் தாம் விரும்பமாட்டார்கள் என்று தமிழின் சிறப்பினை,

**“கேட்டிடிற் காதுக் கின்பம் கிளந்திடின் நாவுக் கின்பம்**
**ஊட்டிடி னுளத்துக் கின்பம் உணர்ந்திடி னுணர்வுக் கின்பம்**
**பாட்டுரை நடையிற் செல்லும் பழந்தமிழ்ப் பாவாய் நீதான்**
**வீட்டிலா வின்ப மானால் விரும்பிடார் யார்தான் சொல்லாய்.” [33]**

**(இராவணகாவியம்., பாயிரம்.,பா.,11)**

என்ற பாடலடியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

உலகின் மூத்த மொழிகளில் ஒன்றான தமிழ், வெறும் பேச்சு மொழியாக மட்டும் இல்லாமல், உணர்வோடு கலந்த உயிராகத் திகழ்கிறது.

**“இனித்த பாலினுந் தேனினு மின்சுவைக்**
**கனித்தொ கையினுங் கட்டிக் கரும்பினும்**
**நினைத்த வாயுஞ்சொல் நெஞ்சு மினித்திடும்..” [34]**

**(இராவணகாவியம்., பாயிரம்.,பா.,8)**

Vol. 12, No. 05 (October 2026), pp. 1–10
ISSN 3049-0723 (Online) · ISSN 3107-7781 (Print)

என்ற பாடலடியில், பாலும், தேனும், பழங்களும் சுவைத்தால் தான் இனிக்கும். தமிழை நினைத்தாலே நெஞ்சம் இனிக்கும். சொன்னால் வாய் இனிக்கும். அத்தகைய தனிச்சிறப்புடையது தமிழ் என்று தமிழின் இனிமை குறிப்பிடப்பட்டுள்ளது.

**அனைவரும் விரும்பும் தமிழ்**

தமிழின் சிறப்பை உணர்ந்த மேலைநாட்டறிஞர் டாக்டர் ஜி.யு.போப், தமிழை நன்கு கற்று அதன் சிறப்பினை உணர்ந்ததால் தமது கல்லறையில் ‘ஒரு தமிழ் மாணவன்’ என்று பொறிக்கச் செய்தார்.

'அ' என வாயானது திறந்து ஒலித்தால் தாயாகிய உமது புலன்களின் வழிகள் அய்ந்தும், மா, பலா, வாழை ஆகிய முக்கனி, தேன், பால், இவற்றைக் காணினும் சுவை சுவையற்றன என முகம் சுளித்து, வருந்தித் தளர்ந்து, வெளியே அகன்று போகும் இயல்புடையதாய் மிக்க இன்பம் பொருந்தும் செந்தமிழ்மொழி நீ ஆகையால், பெருவிருப்பத்தோடு, உன்னை விரும்பாதவர் யார் இருக்கின்றனர் என்று,

**“அஎன வாயங் காக்கின் அன்னையுன் புலனா றைந்தும்**
**முக்கனி தேன்பால் கண்டும் முகஞ்சுழித் தினைந்தே**
**யொல்கப் புக்கெழீ யியல்பா யின்பம் புல்குசெந்**
**தமிழ்நீ யானால் அக்கறை யொடுநின் நச்சார்**
**யாரினி தறைவா யம்மா.”** [35]

**(இராவணகாவியம்., பாயிரம்.,பா.,12)**

என்ற பாடலடியில் விளக்கப்பட்டுள்ளது

**தமிழ்ச் சங்கம்**

பாண்டிய மன்னர்கள் தங்களின் தலைநகரங்களில் சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்தனர். இதனை, இலக்கியங்கள் குறித்துள்ளன. முதன்முதலில் சங்கங்களின் வரலாற்றை இறையனார் களவியல் உரை எடுத்துரைக்கின்றது.

பழந்தமிழ் வரலாற்றில் மூன்று தமிழ்ச் சங்கங்கள் கால இடைவெளிகளுடன் இருந்தன. அவை:

1. தலைச்சங்கம்
2. இடைச்சங்கம்
3. கடைச்சங்கம் என்பவையாகும்.

**தலைச்சங்கம்**

தலைச்சங்கம் எனப்படும் முதல் சங்கம் இருந்த இடம் கடல் கொள்ளப்பட்ட தென்மதுரையாகும். இச்சங்கத்துக்கு அகத்தியர், திரிபுரம் எரித்த விரிசடைக் கடவுள், குன்றமெறிந்த முருகவேள், முரஞ்சியூர் முடிநாகராயர், நிதியின் கிழவன் எனும் இவர்கள் உள்ளிட்ட 4,449 பேர் புலவர்களாக இருந்தனர்.

இச்சங்கத்தை அமைத்து நடத்திய பாண்டிய மன்னர்கள் காய்ச்சினவழுதி முதல் கடுங்கோன் ஈறாக 89 பேர் ஆவர். இவர்களுள் எழுவர் புலவர்களாகவும் செயல்பட்டனர். இச்சங்கம் 4,440

Vol. 12, No. 05 (October 2026), pp. 1–10
ISSN 3049-0723 (Online) · ISSN 3107-7781 (Print)

ஆண்டுகள் நடைபெற்றது. அங்கு அகத்தியம், பரிபாடல், முதுநாரை, முதுகுருகு, களரியாவிரை எனும் நூல்கள் இயற்றப் பட்டன.

**இடைச்சங்கம்**

இடைச்சங்கம் எனப்படும் இரண்டாம் சங்கம் கடல் கொள்ளப் பட்ட கபாடபுரத்தில் நடைபெற்றது. இதனுள் 3,700 புலவர்கள் இருந்துள்ளனர். இப்புலவர்களுள் அகத்தியர், தொல்காப்பியர், இருந்தையூர்க் கருங்கோழி, மோசி, வெள்ளூர்க் காப்பியன், சிறுபாண்டரங்கன், திரையின் மாறன், துவரைக்கோன், கீரந்தை என்போர் குறிப்பிடத்தக்கவர்களாவர். இவர்களுள் 59 பேர் உறுப்பினர்களாகச் செயல்பட்டனர்.

இச்சங்கம் வெண்டேர்ச் செழியன் முதல் முடத்திருமாறன் ஈறாக 59 மன்னர்களால் ஆதரிக்கப்பட்டது.இம்மன்னர்களுள் ஐவர் புலவர்களாகவும் செயல்பட்டனர். இச்சங்கம் 3700 ஆண்டுகள் நடைபெற்றது. இச்சங்கத்துள் தொல்காப்பியம், மாபுராணம் பூதபுராணம், இசை நுணுக்கம், கலி, குருகு, வெண்டாளி, வியாழ மாலை, அகவல் என்பன இயற்றப்பட்டன.

**கடைச்சங்கம்**

கடைச்சங்கம் என்ற மூன்றாம் சங்கம் மதுரையில் செயல்பட்டது. இதனுள், சிறுமேதாவியார், சேந்தம்பூதனார், அறிவுடையரனார், பெருங்குன்றூர்க்கிழார், இளந்திருமாறன், நல்லந்துவனார், மருதனிளநாகனார், நக்கீரர் முதலிய 49 பேர் உறுப்பினர்களாகவும், இவர்கள் உள்ளிட்ட 449 பேர் புலவர்களாகவும் இருந்தனர். இச்சங்கம் நடைபெற்ற காலங்கள் 1,850 ஆண்டுகளாகும். இச்சங்கத்தை முடத்திருமாறன் முதலாக உக்கிரப்பெருவழுதி இறுதியாக 49 மன்னர்கள் வழி நடத்தினர். இம்மன்னர்களுள் மூவர் புலவர்களாகவும் செயல்பட்டனர்.

இச்சங்கத்துள் தொல்காப்பியம் இலக்கண நூலாகச் செயல்பட்டது. இச்சங்கத்தில் நெடுந்தொகை, குறுந்தொகை, நற்றிணை, புறநானூறு, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, நூற்றைம்பது கலி, எழுபது பரிபாடல், கூத்து, வரி, சிற்றிசை, பேரிசை என்பன இயற்றப்பட்டன.

பாண்டியர் தமிழ்போற்றும் அவையம் வைத்து இருந்தனர் என்பதையும், அவ்வவையில் நிலந்தரு திருவிற் பாண்டியன் முன் தொல்காப்பியம் அரங்கேற்றப்பட்டது என்பதையும்,

**“நிலந்தரு திருவிற் பாண்டியன் அவையத்து**
**……………………………………………….**
**தொல்காப்பியன் எனத் தன்பெயர் தோற்றி" [36] (தொல்காப்பியம்,சிறப்புப் பாயிரம்)**

எனத் தொல்காப்பியப் பாயிரம் எடுத்துரைக்கின்றது.

தமிழ்ச் சங்கம் இருந்ததைக் மதுரைக்காஞ்சி, சிறுபாணாற்றுப்படை போன்ற நூல்கள் காட்டுகிறது.

கூடல் நகரில் மன்னர்களால் தமிழ்மொழி போற்றப்பட்ட செய்தியை,

**“இமிழ்குரல் முரசம் மூன்றுடன் ஆளும்**
**தமிழ்கெழு கூடல் தண்கோல் வேந்தே” [37] (புறநானூறு, 58:12-13)**

என்னும் அடிகள் காட்டுகின்றன.

சின்னமனூர்ச் செப்பேடு, **“மகாபாரதம் தமிழ்ப்படுத்தும் மதுராபுரிச் சங்கம் வைத்தும்”** என்று சுட்டுகின்றது. செய்யாறு ஆண்டிப்பட்டியில் கண்டுபிடிக்கப்பட்ட நாணயங்களும், போளூர்க் கல்வெட்டும் சங்கம் விளங்கியதற்கான சான்றுகளாகின்றன.

இராவணகாவியத்தில் முச்சங்கம் பற்றிய செய்தி குறிப்பிடப்பட்டுள்ளது. தனக்குத்தான் மட்டுமே உவமையாக விளங்கும் தமிழ் வளர, இலக்கியமும் இலக்கணமும், தகுதிப்பட முன்னோர்கள் செய்து வைத்த முதற்சங்கம், இடைச்சங்கம் போல, முதுநூல்களை எல்லாம் பொன்னே போலப் போற்றிப் பெருமைக்குரிய தமிழ் மக்கள் எல்லாம் கற்ற நலம் பொருந்தி வாழ என்னால் இயன்றபடி இப்போதும் சங்கம் வைத்து மன்னவனாகிய நீவிர் நினைத்தவாறு செய்து வருகின்றேன் என்று விளக்கப்பட்டுள்ளது.

**“ தன்னேருந் தமிழ்வளர விலக்கியமு மிலக்கணமுந் தகுதி யாக**
**முன்னோர்கள் செய்துவைத்த முதற்சங்க விச்சங்க முதுநா லெல்லாம்**
**பொன்னேபோற் போற்றியிருந் தமிழரெலாங் கற்றுநலம் பொருந்தி வாழ**
**என்னாலீங் கியன்றபடி செய்துவரு கின்றேன்மனி னைத்தாய் போல.” [38]**

**(இராவணகாவியம்., அரசியற் படலம் .,பா.,12)**

என்ற பாடலடியில் விளக்கப்பட்டுள்ளது.

முச்சங்கங்களில் பெருமைமிக்கதும், வணங்கக் கூடிய தமிழன்னை என்று பின்வரும் பாடலில் போற்றப்பட்டுள்ளது.

**“…………………வளர்ந்துமுத்**
**தூய சங்கத் திருந்த தொழுதகு**
**தாயை நேர்தமிழ்த் தாய்….” [39]** **(இராவணகாவியம்., பாயிரம்.,பா.,7)**

என்ற பாடலடியில் தமிழ்ச் சங்கங்கள் இருந்ததை எடுத்துக்காட்டுகிறது.

**தொகுப்புரை**

- இராவணகாவியம் தமிழரின் பண்பாட்டு சான்றுகளாக அமைவதோடு தமிழ்மொழியின் சிறப்புகளையும் முன்மொழிகின்றன.
- மொழி சமூகத்தின் அடையாளம், பண்பாடு மற்றும் அறிவின் வெளிப்பாடு ஆகும்.
- தமிழ் என்ற சொல்லுக்கு இனிமை, நீர்மை, தமிழர், தமிழ்நாடு என்று பொருள்.
- அனைத்து மொழிகளுக்கும் தலைமைமொழி என்றும் , கன்னடம், தெலுங்கு, மலையாளம் போன்ற மொழிகளின் தாய் தமிழ்.
- தனக்குத் தானே நிகரான ஒப்பற்றது தமிழ்மொழி.
- மூவேந்தர்கள் தமிழ்ப்புலவர்களாகவும் , தமிழகத்தின் காவலர்களாகவும் இருந்தனர்.
- நாடெங்கும் அறிவுமிக்க புலவர்களின் கூட்டம், எங்குத் திரும்பினாலும் நயளஒநடைபெறும் விழாக்கள் அனைத்தும் தமிழின் பெருமையைச் சொல்லும் கொண்டாட்டங்கள், பாடல்கள் அனைத்தும் தமிழில் அமைகின்றன. வயல்வெளிகளிலும் ஏனைய இடங்களிலும் தமிழின் கலைகளும் கூத்தாட்டங்கள், ஊர்களில் உள்ள வீதிகளில் எல்லாம் தமிழ்மொழியின் நறுமணம் என்று விளக்கப்பட்டுள்ளது.
- புலவர்கள் ஏற்றுக் கொள்ளும் வண்ணம், மலையிலே ஏறி, அங்கிருந்து அவர்களின் கண்ணுக்கு எட்டிய தொலைவுப் பரப்புள்ள நிலங்கள் அனைத்தையும் பரிசாகக் கொடுத்தல். புலவர்களைத் தேடிச் சென்று, அவர்களைத் தன் அவைக்களத்திற்கு வரவழைத்து, புலவர்கள் விரும்பும் நாடு, நகரங்கள் மற்றும் செல்வம் என அவர்கள் மனம் மகிழக்கூடிய அனைத்தையும் பரிசாக வழங்கி, அவர்கள் மூலமாக தமிழை வளர்த்தனர்.

- இராவணன் தமிழ்க்கொடியில் ஏடும் எழுத்தாணியும் பொறிக்கப்பட்டுள்ளது.
- இராவணனை ஒரு சிறந்த தமிழ்மொழிப் பற்றாளராகவும், ஒரு மொழியான தமிழை ஆட்சிமொழியாக வைத்து அரசாளும் மன்னன்.
- தமிழ்ச் சொற்களைக் கேட்டால் காதுக்கு இன்பம், சொன்னால் நாவினுக்கு இன்பம், உள்ளே சுவைத்து உண்டால் மனத்திற்கு இன்பம், உணர்ந்து பார்த்தால் உணர்வுக்கு இன்பம், பாட்டிலும் உரைநடையிலும் அமைந்து இயங்கிச் செல்லும் தன்மையது. தமிழ் நீக்க முடியாத இன்பம் என்று தமிழின் இனிமையை போற்றுதல்.
- முன்னோர்கள் செய்து வைத்த தமிழ்ச்சங்கங்கள் குறிப்பு காணப்படுகிறது.

அவ்வகையிலே, இராவணகாவியத்தில் தமிழ்மொழியின் சிறப்புகள் பற்றி விளக்கப்பட்டுள்ளன.

**அடிக்குறிப்புகள்**

1. மு,வரதராசன், மொழி வரலாறு, பக்.27.
2. பிங்கல நிகண்டு மூலமும் உரையும், பக், 492.
3. நா.கதிரைவேற் பிள்ளை, தமிழ்மொழி அகராதி , பக், 741.
4. ந.சி.கந்தையா , செந்தமிழ் அகராதி, பக் , 299.
5. க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி,பக்,506.
6. பாரதியார் கவிதைகள்,பக், 47.
7. V.R.R.Dikshitar,Pre-Historic South India.p.179.
8. இராவணகாவியம்., பாயிரம்.,பக்,1.
9. மனோன்மணீயம்: பாயிரம்: தமிழ்த்தெய்வ வணக்கம்,பக்., 2.
10. இராவணகாவியம்., பாயிரம்.,பக்,2.
11. மேலது, பக்,1.
12. முனைவர் இரா. செயபால், அகநானூறு மூலமும் உரையும், பக்,89, முனைவர் இரா. செயபால், அகநானூறு மூலமும் உரையும், பக்,57.
13. இராவணகாவியம்., தாய்மொழிப் படலம்., பக், 62.
14. மேலது, பக்,86.
15. கா.சு.பிள்ளை, இலக்கிய வரலாறு ,பக்,12.
16. இராவணகாவியம்., தாய்மொழிப் படலம்., பக்,70.
17. இராவணகாவியம்., இலங்கைப் படலம்., பக்,90.
18. இராவணகாவியம்., பாயிரம்.,பக், 81.
19. முத்து. இராமமூர்த்தி, மதுரைக்காஞ்சி, மூலமும் தெளிவுரையும், பக்,156.
20. ச. சுபாஷ் சந்திரபோஸ், தமிழ்விடுதூது, ப, 80.
21. இராவணகாவியம்., தாய்மொழிப் படலம்.,பக்,73.
22. இராவணகாவியம்., தாய்மொழிப் படலம்.,பக்,71)
23. கணேசையர் பதிப்பு, தொல்காப்பியம் எழுத்ததிகார மூலமும், பக், 240.
24. முனைவர் ச.சுபாஷ் சந்திர போஸ், தொல்காப்பியம், பொருளதிகாரம், பக்,327

25. முனைவர் கு.வெ.பாலசுப்பிரமணியன், முனைவர்அ.விசுவநாதன், முனைவர் வி.நாகராசன், முனைவர் இரா.ஆரோக்கியசாமி, முனைவர் க.திலகவதி, முனைவர் வெ. சத்திய நாராயணன்., புறநானூறு மூலமும் உரையும்.,பக்,538.
26. மேலது,பக், 70
27. இராவணகாவியம்., காட்சிப் படலம்.,பா.,177.
28. இராவணகாவியம்., பாயிரம்.,பக்,81
29. இராவணகாவியம்., தமிழகம் புகு படலம்.,பக்,464
30. பாரதிதாசன் கவிதைகள், தொகுதி 1. ப. 89 .
31. பாரதியார் கவிதைகள்,பக், 47.
32. இராவணகாவியம்., தமிழகம் புகு படலம்.,பக்,465
33. இராவணகாவியம்., பாயிரம்.,பக்,80
34. மேலது, பக்,3.
35. மேலது, பக்,80.
36. தொல்காப்பியம்,சிறப்புப் பாயிரம்,பக்,1.
37. முனைவர் கு.வெ.பாலசுப்பிரமணியன், முனைவர்அ.விசுவநாதன், முனைவர் வி.நாகராசன், முனைவர் இரா.ஆரோக்கியசாமி, முனைவர் க.திலகவதி, முனைவர் வெ. சத்திய நாராயணன்., புறநானூறு மூலமும் உரையும்.,பக்,154,
38. இராவணகாவியம்., அரசியற் படலம் .பக்,274.
39. இராவணகாவியம்., பாயிரம்., பக்,2.

**துணைநூற்பட்டியல்**


1. ஆலிஸ்.அ , பதிற்றுப்பத்து மூலமும் உரையும்,நியூ செஞ்சரி புக் ஹவுஸ் (பி) லிட்,41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை – 600 098.
2. கணேசையர் பதிப்பு, தொல்காப்பியம் எழுத்ததிகார மூலமும், உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம், தரமணி, சென்னை -600 113.
3. கதிரைவேற் பிள்ளை.நா, தமிழ்மொழி அகராதி ,Asian Educational Services, 31, Hauz Khas Village , New Delhi – 110 016, முதல்பதிப்பு 1981.
4. கந்தையா.ந.சி ,செந்தமிழ் அகராதி, தமிழ்மண் பதிப்பகம்,2, சிங்கார வேலர் தெரு, தியாகராயர் நகர், செள்ளை – 600 017, முதல் பதிப்பு-2014.
5. க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி ,9-1, 24 கிழக்குத் தெரு, திருவான்மியூர், சென்னை – 600 041, முதல் பதிப்பு- ஜனவரி 1992.
6. சுபாஷ் சந்திரபோஸ்.ச , தமிழ்விடுதூது, ப, 80. இயல், 23பி-2739, தொப்புள் பிள்ளையார் கோவில் தெரு, தெற்கலங்கம், தஞ்சாவூர் -613 001.
7. சுபாஷ் சந்திர போஸ்.ச , தொல்காப்பியம், பொருளதிகாரம், இயல், 23பி-2739, தொப்புள் பிள்ளையார் கோவில் தெரு, தெற்கலங்கம், தஞ்சாவூர் -613 001.
8. செயபால்.இரா, அகநானூறு மூலமும் உரையும், பக்,89,)( முனைவர் இரா. செயபால், அகநானூறு மூலமும் உரையும், நியூ செஞ்சரி புக் ஹவுஸ் (பி) லிட் , 41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை- 600 098.

Vol. 12, No. 05 (October 2026), pp. 1–10
ISSN 3049-0723 (Online) · ISSN 3107-7781 (Print)

9. பாரதிதாசன் கவிதைகள், தொகுதி 1, பூம்புகார் பதிப்பகம், 63,பிராட்வே, சென்னை – 600 108. முதற் பதிப்பு – 1992.
10. பாரதியார் கவிதைகள், அருணா பப்ளிகேஷன்ஸ், சென்னை, முதற்பதிப்பு-2007.
11. பாலசுப்பிரமணியன். கு.வெ, விசுவநாதன்.அ, நாகராசன். வி, ஆரோக்கியசாமி.இரா, திலகவதி.க, சத்தியநாராயணன்.வெ, புறநானூறு மூலமும் உரையும், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்(பி) லிட், முதற்பதிப்பு-2004,41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை-600 698 .
12. பிங்கல நிகண்டு மூலமும் உரையும், மதராஸ் ரிப்பன் அச்சியந்திரசாலை, 87, தம்புசெட்டி வீதி, சென்னை. முதற்பதிப்பு 1917.
13. பிள்ளை. கா.சு, இலக்கிய வரலாறு ,பக்,12, சாரதா பதிப்பகம், சென்னை-600014, முதல் பதிப்பு - அக்டோபர் 2011.
14. புலியூர்க் கேசிகன் உரை, கலிங்கத்துபரணி, பாவை பப்ளிகேஷன்ஸ், 142, ஜானி ஜான் கான் சாலை, இராயப்பேட்டை,சென்னை - 600 014.
15. மனோன்மணீயம்: பாயிரம்: தமிழ்த்தெய்வ வணக்கம்: பா., 2
16. முத்து. இராமமூர்த்தி, மதுரைக்காஞ்சி, மூலமும் தெளிவுரையும், சாரதா பதிப்பகம் , சென்னை-14.
17. ராமகிருஷ்ணன்.எஸ்.இ, க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி , ஈஸ்ட் வெஸ்ட் புக்ஸ், சென்னை – 2001.
18. வரதராசன்.மு,மொழி வரலாறு,பாரி நிலையம்,184, பிராட்வே, சென்னை-600 104.
19. வெற்றியழகன்.ந,புலவர் குழந்தையின் இராவணகாவியம் மூலமும் உரையும், முதல் பதிப்பு-2006, சாரதா பதிப்பகம்,சென்னை.
20. ஜகந்நாதன். கி.வா., சங்கர ராசேந்திர சோழன் உலா, டாக்டர். உ.வே. சாமிநாதையர் நூல் நிலையம், திருவான்மியூர், சென்னை-41,முதற்பதிப்பு-1977.
21. V.R.R.Dikshitar,Pre-Historic South India, University of Madras,1951.

© 2026 ஆ.ஹரிதாபேபி. https://creativecommons.org/licenses/by/4.0 வெளியீடு: Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi..